**செ. கு. எண்:119** **நாள்: 31.08.2017**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை –31.8.2017</u>

தேனி மாவட்டம், தேனி போக்குவரத்து காவல் ஆய்வாளராகப் பணியாற்றி வந்த திரு. N. ரவி அவர்கள் **26.06.2017** அன்று உடல்நலக் குறைவு காரணமாக காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், சூளைமேடு காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. A. ஜெயராமலிங்கம் என்பவர் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி **17.7.2017** அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் காவல் நிலையத்தில், தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு R.ராஜேஷ் அவர்கள் **25.7.2017** அன்று சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், விளாத்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு வெங்கடாசலம் என்பவரின் மனைவி திருமதி தங்கம்மாள் என்பவர் **26.06.2017** அன்று தனது விவசாய நிலத்திற்கு சென்ற போது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், தொட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கோதண்டபாணி என்பவரின் மனைவி திருமதி. கோ. தனலட்சுமி என்பவர் **28.06.2017** அன்று மின்கம்பி அறுந்து விழுந்ததில், மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், பாளையங்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. பெரியசாமி என்பவரின் மகன் திரு. விமல்குமார் என்பவர் **21.07.2017** அன்று மின்கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், கோவிலடி கிராமத்தைச் சேர்ந்த திரு.அமிர்தம் என்பவரின் மகன் திரு. கனகராஜ் என்பவர் 2.07.2017 அன்று விவசாய நிலத்தில், அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், வீயன்னூர் ஆ கிராமத்தைச் சேர்ந்த திரு தாசன் என்பவரின் மகன் திரு பிரின்ஸ் சேவியர் என்பவர் 15.7.2017 அன்று மின்மாற்றியில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், புத்தன்கடை, கைதட்டுகோணம் பகுதியைச் சேர்ந்த திரு.ஜாண் ரோஸ் என்பவரின் மகன் திரு சுஜின் என்பவர் 20.07.2017 அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்; விளவங்கோடு வட்டம், கொல்லங்கோடு 'ஏ' கிராமத்தைச் சேர்ந்த திரு. யோனா என்பவரின் மகன் திரு கனகராஜ் என்பவர் 17.07.2017 அன்று மின் கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், குருசாமிபாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு செல்வகுமார் என்பவர் 25.7.2017 அன்று மின்கம்பத்தில் பழுது நீக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், கொங்கராயனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு சாமிநாதன் என்பவரின் மனைவி திருமதி பேபி மற்றும் அவருடைய மகன் திரு எழில்குமார் ஆகிய இருவரும் 26.7.2017 அன்று விவசாய நிலத்திற்கு நீர் பாய்ச்ச சென்ற போது, மின்வேலியில் சிக்கி உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டம், சிவகிரி "இ" கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வகுமார் என்பவரின் மகள் செல்வி சாருலதா என்பவர் 2.6.2017 அன்று துணிகளை காயவைக்கும் போது, எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவலர்கள் மற்றும் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த 14 நபர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**